யால் எவ்வளவு உருவாக்கப்பட்டிருக்கின்றன? கூட்டுறவுத் துறையால் எவ்வளவு உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, 8 டிஸ்டிலரீஸ் நிறுவனங்கள் ஏற்கனவே எரிசாராயத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கின்றன. அதனுடைய விவரங்கள் திருச்சி டிஸ்டிலரீஸ், ஈ.ஐ.டி. பாரி—நெல்லிக்குப்பம்—கெம்ப்ளாஸ்ட்-காடாம்புலியூர், கோயம்புத்தூர் ஆல்கஹால் அண்டு கெமிக்கல்ஸ்—சின்னபுலியூர், ஓரியன் கெமிக்கல்ஸ்—செங்கை-அண்ணா மாவட்டம், கெம்ப்ளாஸ்ட்—தர்மபுரி மாவட்டம், சக்தி ஷுகர்ஸ்—பெரியார் நகர், Southern Agri-Furane Industries Mundiambakkam ஆகிய இந்த இடங்களில் இவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

புதிய சட்டம் கொண்டு வந்த பிறகு விடப்பட்ட பேருந்துகள்

*292—திரு. மா. மணிமாறன்:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) தனியார் பேருந்தை தேசியமயமாக்கலாம் என்ற உச்ச நீதிமன்ற தீர்ப்புக்குப் பின் தமிழக அரசு தனியார் பேருந்து விடவும் கூடுதலாகப் பேருந்து வைத்துக்கொள்ளவும் சட்டம் கொண்டுவந்த பிறகு விடப்பட்ட பேருந்துகள் எத்தனை?

(ஆ) பயனடைந்துள்ள கிராமங்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே,

(அ) 106 பேருந்துகள்.

(ஆ) 458 கிராமங்கள்.

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே, வழங்கப் பட்ட இந்த 106 உரிமங்களில் வழக்கு உச்ச நீதிமன்றத்திற்குப் போவதற்கு முன்னாலே வேண்டுகோள் விடுத்தவர்கள் எத்தனை பேர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டது என்பதையும் வழக்கு தீர்ப்பு சொன்னதற்கு பின்னாலே எத்தனை பேருக்கு உரிமம் வழங்கப் பட்டது என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தில் நம்முடைய தேசியமய சட்டத்தை எதிர்த்து வழக்கு நடைபெற்றது. அந்த வழக்கின் முடிவில் உச்ச நீதி மன்றத்தினுடைய தீர்ப்புப்படி சட்டம் செல்லுபடியாகும் என்று தீர்ப்பு சொல்லப்பட்டதற்குப் பிறகு கொடுக்கப்பட்ட பெர் மிட்டுகளுடைய எண்ணிக்கை, பேருந்துகளுடைய எண்ணிக்கை பயனடைந்த கிராமங்கள் ஆகியவை பற்றிய விவரம் இருக்கிறது.

1990 ஏப்ரல் 25]

சட்டத்திற்கு முன்னாலே விண்ணப்பம் போட்டார்களா அல்லது பின்னாலே விண்ணப்பம் போட்டார்களா என்ற விவரக் குறிப்பு என்னிடத்தில் இல்லை.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசியமயமாக்கக்கூடிய கொள்கை பற்றி சுப்ரீம் கோர்ட் முடிவு செய்வதற்கு முன்னதாக, எத்தனை பஸ் உள்ள தனியாருக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தேசியமய சட்டத்திற்கு முன்னாடியா, பின்னாடியா, எதைக் கேட்கிறீர்கள் ? (குறுக்கீடு) மொத்தமாக 106 பேருந்துகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதில் பயன் அடைந்த கிராமங்கள் 458. அதைத்தான் நம்முடைய திரு. மணிமாறன் அவர்களும் கேட்டிருந்தார்கள். ஏற்கனவே பதில் சொல்லி இருக்கிறேன்.

வீட்டுவசதி வாரிய வீடுகள், மனைகளில் தனி ஒதுக்கீடு.

* *1772*—**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்** : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வீட்டுவசதி வாரிய வீடுகள், மனைகளை ஒதுக்குவதில் தாழ்த்தப்பட்ட மற்றும் மலை ஜாதி மக்களுக்கென தனி ஒதுக்கீடு தரப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே

(அ) வீட்டுவசதி வாரிய வீடுகள், மனைகளை ஒதுக்குவதில், தாழ்த்தப்பட்ட மற்றும் மலைஜாதி மக்களுக்கென தனி ஒதுக்கீடு தரப்படுகின்றது.

(ஆ) தாழ்த்தப்பட்ட மற்றும் மலை ஜாதியினருக்கென 18 சதவிகிதம் ஒதுக்கீடு தரப்பட்டு வருகின்றது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக சென்னை, மதுரை, கோவை நகரங்களில் நாம் வீடு கட்டி விடுகிறோம். எல்.ஐ.ஜி., எம்.ஐ.ஜி. ரோ டைப் வீடுகள் நாம் கட்டிக் கொடுக்கின்றோம். அதிலே அப்ளை செய்தவர்களுக்கு வீடு கொடுக்கவில்லை. என்ற புகார்கள் வந்துகொண்டே இருக்கின்றனவே, 18 சதவிகிதம் கொடுக்க வேண்டுமென்று சட்டத்தில் இருக்கிறது. ஆனால் செய்வதில்லை. தயவுசெய்து அதைப் பரிசீலனை செய்து எந்தெந்த